**அக்டோபர் – 15**

# TNPSC துளிகள்

- உத்தரப் பிரதேச அமைச்சரவையானது, ஜெவாரில் உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் பெயரை நரேந்திர மோடி சர்வதேச விமான நிலையம் என பெயர் மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆஸ்திரேலியாவின் பர்ஹாமில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு உலக பவுல்ஸ் சாம்பியன் ஆஃப் சாம்பியன்ஸ் போட்டியில் அசாமைச் சேர்ந்த புத்துல் சோனோவால் இந்தியாவின் முதல் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இந்தியக் கடற்படை மற்றும் இங்கிலாந்தின் ராயல் கடற்படை ஆகியவற்றுக்கு இடையேயான வருடாந்திர இருதரப்பு கடல்சார் பயிற்சியான கொங்கன் பயிற்சி 2026 ஆனது ஐக்கிய பேரரசின் பிளைமவுத் கடற்கரையில் நடைபெற்றது.
- இமாச்சலப் பிரதேசத்தின் லஹவுல்-ஸ்பிதியில் உள்ள கீலாங்கில் இந்தியாவின் முதல் உயரமான மலைப்பகுதி சுகாதார ஆராய்ச்சி மையத்திற்கு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டா அடிக்கல் நாட்டினார்.
- மத்திய உள்துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, ஜந்தர் மந்தரை போராட்டக் களமாக அறிவித்திருந்ததை டெல்லி காவல்துறை திரும்பப் பெற்றது. மேலும் கிழக்கு டெல்லியில் உள்ள ராம்லீலா மைதானம், புராரி மைதானம் மற்றும் CBD மைதானம் ஆகியவற்றை மாற்று இடங்களாக அறிவித்துள்ளது.
- உலக சுகாதார நிறுவனமானது செர்வாவாக் தடுப்பூசிக்கு முன்-தகுதி அங்கீகாரத்தை வழங்கியதன் மூலம் இந்த அங்கீகாரத்தைப் பெறும் இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்ட முதல் குவாட்ரிவலன்ட்/நாற்கூறு மனித பாப்பிலோமா வைரஸ் தடுப்பூசியாக இது மாறியுள்ளது.
- மரண தண்டனையை ஒழிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், உலகளவில் மனித உரிமைகள் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகவும் ஆண்டுதோறும் அக்டோபர் 10 அன்று மரண தண்டனைக்கு எதிரான உலகளாவிய தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Stories for Life" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## எச்.ஐ.வி/எய்ட்ஸ் குழந்தை நலத் திட்டம்

- 2026 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் அமலுக்கு வரும் வகையில், எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மாதாந்திர நிதி உதவியை தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது.
- பெற்றோர்கள் இருவரையும் இழந்த எச்.ஐ.வி பாதிப்புடன் வாழும் குழந்தைகள் மாதம் ஒன்றுக்கு ரூ.3,000 பெறுவார்கள்; ஒரு பெற்றோரை இழந்தவர்கள் ரூ.2,000 பெறுவார்கள்.
- பெற்றோருடன் வாழும் குழந்தைகள் மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயால் பெற்றோர்கள் இருவரையும் இழந்த நோய்த்தொற்று இல்லாத குழந்தைகள் மாதம் ரூ.1,500 பெறுவார்கள்.
- ஊட்டச்சத்து, கல்வி மற்றும் தொடர்ச்சியான சிகிச்சைக்கு ஆதரவளிக்கும் வகையில் இத்திட்டத்திற்காக கூடுதலாக ரூ.1.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




## தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா வழக்கு



**Madras HC upholds acceptance of resignations of 6 AIADMK MLAs, directs Speaker to complete disqualification proceedings in 2 months**

The Madras High Court on Tuesday (October 13) upheld the Speaker's decision to accept the resignations of six AIADMK MLAs, holding that their resignations were genuine, but directed the Speaker to complete the disqualification proceedings against them within two months.

- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 13 அன்று ஆறு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமாக்களை ஏற்றுக் கொண்ட தமிழ்நாடு சட்டப்பேரவை சபாநாயகரின் முடிவை சென்னை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது.
- இந்த ஆறு சட்டமன்ற உறுப்பினர்களும் பின்னர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர் என்பதோடு மேலும் அவர்களது ராஜினாமா கடிதங்கள் 2026 ஆம் ஆண்டு மே 26 மற்றும் ஜூன் 29 ஆகிய தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சமர்ப்பிக்கப் பட்டன.
- நான்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான நிலுவையில் உள்ள தகுதிநீக்க நடவடிக்கைகளை இரண்டு மாதங்களுக்குள் முடித்து, ஏழு நாட்களுக்குள் அதற்கான கால அட்டவணையை வெளியிடுமாறு சபாநாயகருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
- ராஜினாமாக்களை ஏற்றுக்கொள்வதும் தகுதிநீக்க நடவடிக்கைகளை முடிவு செய்வதும் இரண்டு தனித்தனி அரசியலமைப்புச் செயல்முறைகள் என்று அது

தீர்ப்பளித்தது.

- 2026 ஆம் ஆண்டு மே 13 அன்று நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பின் போது அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி கொறடாவின் உத்தரவை மீறியதாக எழுந்த குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் இந்த வழக்கு தொடரப்பட்டது.

## தமிழ்நாட்டில் அமிர்த பாரத் நிலையத் திட்டம்

- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 11 அன்று தமிழ்நாட்டில் மறுசீரமைக்கப்பட்ட ஐந்து ரயில் நிலையங்களை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்ததன் மூலம் மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் உள்ள 77 நிலையங்களில் மொத்தம் 26 நிலையங்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன.
- அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி), பழனி (திண்டுக்கல்), நாமக்கல் (நாமக்கல்), பரமக்குடி (ராமநாதபுரம்) மற்றும் வேலூர் கண்டோன்மென்ட் (வேலூர்) ஆகியவையே அந்த ஐந்து ரயில் நிலையங்களாகும்.
- அமிர்த பாரத் நிலையத் திட்டம் 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இந்திய தேசிய இணையதளத்தின்படி, அமிர்த பாரத் நிலையத் திட்டமானது நாடு முழுவதும் 1,309 நிலையங்களை உள்ளடக்கிய ஒரு நீண்ட கால மறுசீரமைப்புத் திட்டமாகும்.
- இது பயணிகள் வசதிகள், அணுகல்தன்மை, தூய்மை மற்றும் பன்முக இணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# தேசியச் செய்திகள்

## உலகளாவிய பசுமைவெளி முதலீட்டுப் பங்கீடு

- ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பின் 2026 ஆம் ஆண்டு வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அறிக்கை இந்தியாவின் முதலீட்டுப் பங்கு மற்றும் பொருளாதார வளர்ச்சிக் கணிப்புகளை வெளியிட்டுள்ளது.
- 2020-2025 காலகட்டத்தில் உலகளாவிய பசுமைவெளி முதலீட்டில் இந்தியா 5.7% பங்கை கொண்டுள்ளது. அதே வேளையில் சீனாவின் பங்கு 2.8% ஆக உள்ளது.
- இந்தியா 2008-2021 காலகட்டத்தில் 1,416 தொழில்துறைக் கொள்கை நடவடிக்கைகளையும், 2022-2025 காலகட்டத்தில் 707 நடவடிக்கைகளையும் செயல்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2026 ஆம் ஆண்டில் 7.3%

ஆகவும், 2027 ஆம் ஆண்டில் 6.8% ஆகவும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் குடும்ப நுகர்வு வளர்ச்சியானது 2026 ஆம் ஆண்டில் 6.9% ஆகவும், 2027 ஆம் ஆண்டில் 5.6% ஆகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லை கார்பன் வரி 2026




- ஐரோப்பிய ஒன்றியத்தின் கார்பன் எல்லைச் சீரமைப்பு பொறிமுறையானது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று அதன் உறுதியான கட்டத்தில் நுழைந்துள்ளதுடன் இது இந்திய ஏற்றுமதியாளர்களுக்கான இணக்கத் தேவைகளை அதிகரித்துள்ளது.
- இரும்பு மற்றும் எஃகு, அலுமினியம், சிமெண்ட், உரங்கள், மின்சாரம் மற்றும் ஹைட்ரஜன் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளை அவற்றின் உட்பொதிக்கப்பட்ட கார்பன் உமிழ்வைக் கணக்கிடுவதற்காக இந்த அமைப்பு உள்ளடக்கியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு இறக்குமதியுடன் தொடர்புடைய உமிழ்வுகளுக்கான கொடுப்பனவுகள் 2027 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் வருடாந்திர அறிவிப்புகள் மற்றும் சான்றிதழ்கள் 2027 ஆம் ஆண்டு செப்டம்பர் 30-க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- ஐரோப்பிய ஒன்றிய உமிழ்வு வர்த்தக அமைப்பின் கீழ் ஐரோப்பிய ஒன்றிய உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் கார்பன் செலவுக்கு நிகரான விலையை

இறக்குமதிகளுக்குப் பயன்படுத்துவதன் மூலம் கார்பன் கசிவைத் தடுப்பதை இந்த வழிமுறை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இணக்கச் செலவுகள், சிக்கலான ஆவணப் பணிகள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து சரிபார்க்கப்பட்ட உமிழ்வுத் தரவைப் பெறுவதில் உள்ள சிரமங்கள் ஆகியவற்றால் சவால்களை எதிர் கொள்கின்றன.
- சர்வதேச பொருளாதார உறவுகளுக்கான ஆராய்ச்சிக்கான இந்தியக் குழுவின் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாத ஆய்வின்படி, ஒரு டன் கார்பன் டை ஆக்சைடுக்கு 86.01 அமெரிக்க டாலர் என்ற கார்பன் விலையின் கீழ், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இந்தியாவின் இரும்பு மற்றும் எஃகு ஏற்றுமதி 23.94% குறையக்கூடும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அண்டார்டிக் பனிப்பரப்பு வரலாறு காணாத அளவில் சரிவு




- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று அண்டார்டிக் கடல் பனிப்பரப்பு அதன் குளிர்கால அதிகபட்ச அளவில் செயற்கைக்கோள் பதிவுகளில் மூன்றாவது மிகக் குறைந்த அளவை எட்டியதுடன் இது சுமார் 17.59 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டிருந்தது.
- பனியின் பரப்பளவு நீண்டகாலச் சராசரியை விட சுமார் 1 மில்லியன் சதுர கிலோ மீட்டர் குறைவாக இருந்தது.
- பதிவுகளில் உள்ள குளிர்கால கடல் பனியின் மிகக் குறைந்த நான்கு அதிகபட்ச அளவுகள் கடந்த நான்கு ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளன.
- அண்டார்டிக் கடல் பனி வழக்கமாக செப்டம்பரில் அதன் அதிகபட்ச அளவையும் பிப்ரவரியில் அதன் குறைந்தபட்ச அளவையும் அடையும்.
- செயற்கைக்கோள் பதிவுகள் 1978 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கின; கடல் பனிப் பரப்பை அளவிட அறிவியலாளர்கள் செயலற்ற நுண்ணலை உணரிகளைப் பயன்படுத்துகின்றனர்.

- அண்டார்டிக் கடல் பனியானது 1979 முதல் 2014 ஆம் ஆண்டு வரை தசாப்தத்திற்கு சுமார் 1% அதிகரித்தது, ஆனால் 2016 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க சரிவுகள் தொடங்கின.

## சாக்லேட் மஹசீர் பாதுகாப்புத் திட்டம்

- பூர்வீக மீன் இனங்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக சிக்கிம் முதலமைச்சர் சாக்லேட் மஹசீர் மீன்களை ரங்கீத் ஆற்றில் விட்டார்.
- தாமிர மஹசீர் என்றும் அழைக்கப்படும் சாக்லேட் மஹசீர் என்பது சிப்ரினிடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நன்னீர் மீன் ஆகும்; இது மேகாலயாவில் உள்நாட்டில் 'காவ் சா' என்று அழைக்கப்படுகிறது.
- இது மேகாலயா மற்றும் சிக்கிமின் மாநில மீன் ஆகும் என்பதோடு இது மேலும் வட கிழக்கு இந்தியா முழுவதும் உள்ள ஆறுகள் மற்றும் மலை நீரோடைகளில் காணப் படுகிறது.
- ரங்கீத் ஆறு தீஸ்தா நதியின் முக்கிய துணை நதியாகும்; இது இந்தியாவின் சிக்கிம் மற்றும் மேற்கு வங்காளம் வழியாகப் பாய்கிறது என்பதோடு இது சிக்கிமின் இமயமலைப் பகுதியில் உருவாகிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய புத்தாக்கக் குறியீடு 2026

- உலக அறிவுசார் சொத்து அமைப்பானது 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய புத்தாக்கக் குறியீட்டை வெளியிட்டது. இதில் புத்தாக்கச் செயல்திறன் அடிப்படையில் 139 பொருளாதாரங்களுக்கு தரவரிசை வழங்கப்பட்டுள்ளது.
- ஸ்விட்சர்லாந்து தொடர்ந்து 16-வது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதனைத் தொடர்ந்து ஸ்வீடன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன; இந்தியா ஒட்டுமொத்தமாக 38-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 36 குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட பொருளாதார நாடுகள் மற்றும் மத்திய

மற்றும் தெற்காசியாவில் உள்ள 11 பொருளாதார நாடுகள் மத்தியில் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

- இந்தியா புத்தாக்க உள்ளீடுகளில் 49வது இடத்தையும், புத்தாக்க வெளியீடுகளில் 25-வது இடத்தையும் பிடித்துள்ளது. மேலும் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்ப சேவைகள் ஏற்றுமதியில் உலகளவில் முன்னிலை வகிக்கிறது.
- ஷென்சென்-ஹாங்காங்-குவாங்சோ தொகுப்பு உலகளவில் முதலிடத்தைப் பிடித்தது. அதனைத் தொடர்ந்து டோக்கியோ-யோகோஹாமா உள்ளன; பெங்களூரு 25-வது இடத்தையும், டெல்லி 27-வது இடத்தையும் பிடித்துள்ளன.
- இந்தக் குறியீடு புத்தாக்க உள்ளீடு மற்றும் புத்தாக்க வெளியீடு ஆகிய இரண்டு துணைக் குறியீடுகளின் கீழ் சுமார் 80 குறிகாட்டிகளைப் பயன்படுத்துகிறது; அவற்றின் மதிப்பெண்களுக்கு சமமான முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.




# இதரச் செய்திகள்

## நேபாள திடீர் வெள்ளம்

- கோர்கா மாவட்டத்தில் உள்ள நேபாளத்தின் புத்தி கண்டகி ஆற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது, இது உள்கட்டமைப்புகளை சேதப்படுத்தியது.
- திடீர் வெள்ளம் என்பது கடுமையான மழை, மேக வெடிப்பு, திடீரென நீர் வெளியேறுவது அல்லது தற்காலிக நதி அடைப்புகள் உடைந்து போவது போன்றவற்றால் சில நிமிடங்கள் அல்லது மணிநேரங்களுக்குள் உருவாகும் திடீர், விரைவான வெள்ளப்பெருக்கு ஆகும்.
- இவை பெருமளவிலான நீர், சேறு, பாறைகள் மற்றும் குப்பைகளை அடித்துச் செல்வதால், திடீர் அழிவையும் உயிர் இழப்பையும் ஏற்படுத்துகின்றன.
- நேபாளத்தின் கோர்கா மாவட்டத்தில், சியுரிபாஸ் என்ற இடத்திற்கு மேலே ஏற்பட்ட

நிலச்சரிவு சும்கே கோலா நீரோடையை தடுத்ததாகக் கூறப்படுகிறது இதனால் கீழ் நோக்கி வெள்ள நீர் திடீரென வெளியேறின.

- இமயமலையில் பின்வாங்கும் பனிப்பாறைகள், நிலையற்ற சரிவுகள், பனிப்பாறை ஏரிகள் வெடிப்பது மற்றும் தளர்வான படிவுகள் ஆகியவை திடீர் வெள்ள அபாயங்களை அதிகரிக்கச் செய்யும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★